# தினசரி வழிபாட்டு முறை



# 11. ஸ்ரீ லலிதா நவரத்ன மாலை

## காப்பு

ஆக்கும் தொழில் ஐந்தரனாற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேச்வரிபால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கணநயக வாரணமே

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
        மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
        மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்
        கண்மூடி நெடுங்கன வானதவம்
பெற்றும் தெரியார் நிலையென்னில் அவம்
        பெருகும்பிழையேன் பேசத்தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
        பகைவர்க்கெமனாக எடுத்தவளே
வற்றாத அருட்சுனையே வருவாய்
        மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே 1

## நீலம்

மூலக்கனலே ஶரணம் ஶரணம்
முடியா முதலே ஶரணம் ஶரணம்
கோலக்கிளியே ஶரணம் ஶரணம்
குன்றாத ஒளிக் குவையே ஶரணம்
நீலத்திருமேனியிலே நினைவாய்
நினைவற்றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரி வருவாய் வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே 2

## முத்து

முத்தேவரும் முத்தொழிலாற்றிடவே
முன்நின்றருளும் முதல்வீ ஶரணம்
வித்தே விளைவே ஶரணம் ஶரணம்
வேதாந்த நிவாஸினியே ஶரணம்
தத்தேறியநான் தனயன் தாய் நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறுததிக்கிணை வாழ்வடையேன்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே 3

## பவளம்

அந்தி மயங்கிய வானவிதானம்
அன்னை நடம்செய்யும் ஆனந்தமேடை
சிந்தை நிறம் பவளம் பொழிவாரோ
தேம் பொழிலாமிது செய்தவளாரோ
எந்தயிடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுபவர்க்கருள் எண்ணமிகுத்தாள்
மந்திர வேத மயப்பொருளானாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே 4

## மாணிக்கம்

காணக்கிடையா கதியானவளே
கருதக்கிடையாக் கலையானவளே
பூணக்கிடையாப் பொலிவானவளே
புனையக்கிடையாப் புதுமைத்தவளே
நாணித்திரு நாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே 5

## மரகதம்

மரகத வடிவே ஶரணம் ஶரணம்
மதுரித பதமே ஶரணம் ஶரணம்
ஶூரபதி பணியத் திகழ்வாய் ஶரணம்
ஶ்ருதிஜதிலயமே இசையே ஶரணம்
அர ஹர சிவ என்றடியவர் குழும
அவரருள் பெற அருளமுதே ஶரணம்
வரநவநிதியே ஶரணம் ஶரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே 6

## கோமேதகம்

பூ மேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீ மேல் இடினும் ஜெயசக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே தருவாய் தருவாய்
மாமேருவிலே வளர்கோகிலமே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே 7

## பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராகவிலாஸ வியாபினி அம்பா
சஞ்சலரோக நிவாரணி வாணி
ஶாம்பவி சந்த்ரகலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத ஸ்வரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சுள மேரு ஶ்ருங்க நிவாஸினி
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே 8

## வைடூரியம்

வலையொத்த வினை கலையொத்த மனம்
மருளப் பறையா றொலியொத்தவிதால்
நிலையற்றெளியேன் முடியத்தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலையற் றசைவற் றநுபூதிபெறும்
அடியார் முடிவாழ் வைடூரியமே
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே 9

## பயன்

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத்தின மாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எல்லாம் அடைவார்
சிவரத்தின மாய்த் திகழ்வா ரவரே

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

ஜெய சிவரமணி குருகுஹ ஜனனீ -ஜெயமனவனஹரிணீ
ஜெய ஓம் ஸ்ரீ மாதா - மாதா - ஜெய ஜெய ஜெகன்மாதா
மாதா - ஜெய ஓம் ஸ்ரீ மாதா - மாதா - ஜெய ஜெய ஜெகன்மாதா